செய்து அனுப்ப வேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது கழிவு நீராகவே வந்துவிடக்கூடாது, சுத்தப்படுத்தி அனுப்பவேண்டுமென்று தான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை திரு ஜெ. பெள்ளி கவுடர், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. எம். பூபதி ஆகியோர் மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

(ஆ) குன்னூர், உதகை ஆகிய நகரங்களில் குடிநீர்த் தட்டுப்பாடும் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடும்

திரு. ஜெ. பெள்ளி கௌடர்: தலைவரவர்களே குன்னூர், உதகமண்டலம் நகரங்களில் குடிநீர்க் கஷ்டம் இருந்து வருகிறது. இந்த நிலையில் கோடைகாலம் நெருங்குகின்ற காரணத்தாலும் மேலும் அங்கு வருகின்ற மக்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களிடம் தட்டச்சு செய்து கொடுத்திருக்கிறார்கள் பாருங்கள், அதைப் படிக்க வேண்டும்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர்: சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ்-கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். " நீலகிரி மாவட்டம், குன்னூர், உதகமண்டலம் ஆகிய நகரங்களில் குடிநீர் கிடைக்காமையால் பொதுமக்களுக்கு ஏற்படவிருக்கும் இடர்ப்பாடுபற்றி "

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர்வர்களே, சட்டப் பேரவையின 41-வது விதியின கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" நீலகிரி மாவட்டம், குன்னூர், உதகமண்டலம் ஆகிய நகரங்களில் குடிநீர் கிடைக்காமையால் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இடர்ப்பாடு பற்றி ".

திரு. எம். பூபதி : பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

" நீலகிரி மாவட்டம், குன்னூர், உதகமண்டலம் ஆகிய நகரங்களில் குடிநீர் கிடைக்காமையால் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இடர்ப்பாடு பற்றி "

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலம் நகராட்சியில் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் செயலில் உள்ளது. 1957 ஆகஸ்டில் நகராட்சிக்கு நீர் வசதிப் பெருக்கத் திட்டம் ஒன்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டது. அத் திட்டம் பயனுள்ள வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சிக்குத் தற்போது நீர் வழங்கும் வாயில்கள் அங்குள்ள மக்களுக்கும், சிருலாப் பயணிகளுக்கும் ஆண்டு முழுவதும் தேவையான நீர்வழங்கப் போதுமானதாக இல்லை. நகராட்சிக்கு நீர் வழங்குவதை நிலையாக உயர்த்த பார்சன்ஸ் பள்ளத்தாக்கு நீர்த் தேக்கத்திலிருந்து ரூ. 33 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நீர் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டது. உதகமண்டலம் நகராட்சி மன்றத்தின் தற்போதைய நிதி நிலைமை, புதிய திட்டத்திற்கு நிதி வழங்கப் போதுமானதாக இல்லை. தனது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் நகராட்சி மன்றம் ஒப்புக்

கொள்ளவில்லை. மேற்கூறிய திட்டத்திற்கு ஏற்பளித்து அது நிறைவேற்றப் படுவதற்கு சிறிது காலமாகக் கூடுமானதால் நகராட்சியின் நீர்ப் பற்றுக் குறையைப் போக்குவதற்காக தலகுந்தா ஓடையிலிருந்து நீர் பெறும் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்படலாம் என்று நகராட்சி மன்றம் செய் குறிப்பு அனுப்பியது. எனவே, உதகமண்டலத்திற்கு நீர் வழங்குவதை அதிகரிப்பதற்காக ரூ. 5·47 இலட்சம் செலவில், தலகுந்தா ஓடையிலிருந்து நீர் பெறுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. மதுரை, பொதுச் சுகா தாரப் பொறியியல் மேற்பார்வைப் பொறியாளரின் மேற்பார்வையில் நக ராட்சி மன்றம், தனது சொந்தச் செலவில் இத் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றது.

பருவ மழை பொய்த்ததன் காரணமாக, குன்னூர் நகராட்சிகள் நீர் வழங்குவது பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. நீர்த் தேக்கத்தில் நீர் மட்டம் கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது. அதன் விளைவாக, இந்த நகராட்சியில் உள்ள மக்களுக்குப் போதுமான நீர் வழங்குவது இயலாதெனத் தெரிய வந்துள்ளது. இந்த இடர்ப்பாட்டினை நீக்குவதற்காக, பழைய காட்டுச்சாலை ஓடையிலிருந்து தண்ணீர் பெற்று, அதனை சாலையா நீர்க் தேக்கத்தில் தேக்கிக்கொண்டு, தற்போதைய நீர்ப் பகிர்வு முறையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கும் திட்டத்தை மேற்கொள்வதற்கு குன் னூர் நகராட்சி மன்றம் எண்ணியது. குன்னூர் நகராட்சிக்கு நீர் வசதி யைப் பெருக்குவதற்காக மேற்கூறிய திட்டத்திற்கு அரசு ஏற்பளித்தது. பொதுச் சுகாதாரப் பொறியியல் நகராட்சிப் பணிகள் துறையின்கீழ் நகராட்சி மன்றம் இத் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றது.

மேற்கூறிய நடவடிக்கைகளின் மூலம் உதகமண்டலம் நகராட்சியிலும், குன்னூர் நகராட்சியிலும் உள்ள மக்களுக்குப் போதுமான நீர் வழங்க இயலுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. ஜெ. பெள்ளி கௌடர்: தலைவர் அவர்களே, அந்த நகரத்தில் மக்கள் பெருக்கம் அதிகமாகிக்கொண்டு வருகின்ற காரணத்தினால் அந்தப் பெரிய திட்டத்தையும் கூடிய விரைவில் அரசாங்கம் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி நகரத்தின தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு ஊட்டி நகராட்சி பார் சன்ஸ் வேலி ஸ்கீம் என்று ஒன்றுபோட்டு, ஏறத்தாழ ரூ. 30 இலட்சத்திற்கு திட்டத்தை அரசாங்கத்திடம் கொடுத்திருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து எப்பொழுது குடிநீர் வழங்கும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்த 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செலவுசெய்கின்ற திட்டத்திற்கு உதகைநகராட்சி மன்றத் தில் நிதிநிலை இப்பொழுது சரியாக இல்லை. எனவே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டு தலகுந்தா ஓடையிலிருந்து நீர் பெற ரூ. 5·47 இலட்சத்திற்கு வேறு ஒரு திட்டத்தை அளித்து, அதையும் நகராட்சி மன்றத்தினுடைய பொறுப்பிலேயே, சொந்தச் செலவிலே நிறைவேற்ற ஒப்புக்கொண்டதன் காரணமாக, விரைவாக அந்தத் திட்டத்தை முடிக்க ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பார்சன்ஸ் வேலி ஸ்கீம் திட்டத்திற்காக ரூ. 33 இலட்சத்தை அந்த நகராட்சி மன்றமே செலவழித்தால்தான் முடியும் என்று கூறி யிருக்கிறார்கள். நமது அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, குடி நீர் திட்டத்தை நாம் பரிபூரணமாக நிறைவேற்றுவோம் என்று உத்தரவாதத் தைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, அரசாங்கம் பொருளாதாரம் குறை வாக இருக்கிற நகராட்சிமன்றங்களுக்குக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பொதுவாக, குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதை மிகக் கனிவோடு பரிசீலனை செய்து கொண்டு வருகின்றார். எல்லா இடங்களிலும் அந்தத் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக ஒரு நல்ல திட்டத்தை விரைவிலே இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

(இ) கோவை நகரில் தண்ணீர்ப் பற்றுக்குறையும், நெருக்கடியைச் சமாளிக்க உடனடி நடவடிக்கையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு சுகாதார–அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. எம். பூபதி அவர்களும் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசர அவசியப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார–அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

“கோயம்புத்தூர் நகரில் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதால், ஒன்றுவிட்டு ஒருநாள்தான் தண்ணீர் விடப்படும் என்றுள்ள நிலைபற்றியும் அந்நெருக்கடியைச் சமாளிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியதும் பற்றியும்”.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Health and Harijan Welfare to a matter of urgent public importance, namely, the serious scarcity of water in the City of Coimbatore resulting in cutting of water supply in the City on alternative days and the need to undertake emergency measures to tide over the crisis.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகருக்குத் தேவைப்படும் குடிநீர் கேரள மாநிலத்திலுள்ள சிறுவாணி ஆற்றிலிருந்து பெறப்படுகிறது. இந்த நகரில் சுமார் 3·5 இலட்ச மக்களுக்கு நாள்தோறும் 50 இலட்சம் காலன் நீர் வழங்கப்படுகிறது. கோடை மாதங்களில் குடிநீர் வழங்கும் அளவு நாளொன்றுக்கு 25 இலட்சம் காலனாகக் குறைக்கப்படுகிறது. இந்நகருக்குக் குடிநீர் வரவைப் பெருக்கும் பொருட்டு, இந்நகரில் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் ஏற்கெனவே 35 துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. கூடுதலாக நான்கு துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும் 2 துளைக் கிணறுகள் விரைவில் அமைக்கப்படும். இக்கிணறுகள் யாவும் முடிக்கப்பட்டு, 1969 மார்ச்சு முடிவுக்குள் பயன்படும். இத்தகைய கிணறுகளிலிருந்து நாளொன்றுக்கு மொத்தமாக 5 இலட்சம் காலன் நீர் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோயம்புத்தூர் நகருக்குக் குடிநீர் வழங்குதலைப் பெருக்குவதற்கு உடனடியாக எடுக்கவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி முடிவெடுக்க கோயம்புத்தூர் நகராட்சித் தலைவருடனும் மற்றும் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலருடனும் 22—2—1969 தேதியன்று ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. குமாரசாமி, செல்வசிந்தாமணி ஏரிகளிலும் பெரிய குளத்திலும் மேலும் 5 துளைக் கிணறுகளை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. நீர் வரவு நன்றாக இருந்தால், மேற்படி பகுதியில் மேலும் துளைக் கிணறுகள் அமைக்கப்படும். பொதுப்பணித் துறையினர் இவ்வேலையை முறை வைப்பில் முன்னுரிமை பெற்ற வேலையாக எடுத்துக்கொண்டு எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் முடித்துக் கொடுப்பர். நகரின் பல்வேறு பகுதிகளிலும் 100 துளைக் கிணறுகள் அமைப்பதென்றும்